<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 194/2013 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சேகர் (எ) ஆறுமுகம் | நாள் | 26.03.2024 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

<u>**வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–**</u>

1) இவ்வழக்கை ஆரம்பத்தில் யார் யார் சேர்ந்து தாக்கல் செய்துள்ளனர் என்றால், பழனி, காவேரி, ஆறுமுகம், கொழந்தைப்பையன், கந்தசாமி மற்றும் ஒரு பழனி என்பவரும் சேர்ந்து தாக்கல் செய்துள்ளனர். எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால், தடம் கேட்டு தாக்கல் செய்துள்ளனர்.

2) வழக்குரையில் எத்தனை அயிட்ட சொத்துக்களை வாதிகள் காண்பித்துள்ளனர் என்றால், மூன்று அயிட்டங்களை காண்பித்துள்ளனர். மேற்படி வாதிகளில் பழனி, ஆறுமுகம், காவேரி, கொழந்தைபையன் ஆகியோர்களின் தகப்பனார் பெயர் சித்தன் என்றால், சரிதான். மேற்படி கந்தசாமியின் தந்தை பெயர் சின்னப்பன் ஆகும். இவ்வழக்கில் நான் ஆறாவது நபராக சொல்லும் பழனியின் தந்தை பெயர் சின்னப்பன் ஆகும். நான் சொல்வது போல் ஆறாவது நபராக பழனி த/பெ சின்னப்பன் என்பவர் மற்ற வாதிகளுடன் சேர்ந்து எவ்வித வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் தவறாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

3) 2ம் வாதி காவேரி இவ்வழக்கு தாக்கல் செயத்தற்கு பின்னிட்டு இறந்துவிட்டார் என்றால், சரிதான். மேற்படி காவேரியின் வாரிசுகள் பெயர் என்னவென்றால், பெரியசாமி, கந்தசாமி, சின்னையன் ஆகியோர் ஆகும். மேற்படி சின்னையனுக்கு வேறு பெயர் உள்ளதா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி காவேரி இறந்ததற்கு பின்னிட்டு அவரின் மகன்கள் மூவரையும் எங்களுடன் சேர்த்துகொண்டோம் என்றால், சரியல்ல.

4) நான் சொல்வது போல் மேற்படி காவேரிக்கு பெரியசாமி, ராஜமாணிக்கம், கந்தசாமி என்ற மூன்று மகன்கள் தான் உள்ளனர் என்றாலும், நான் சொல்வதுபோல் சின்னையன் என்ற ஒரு மகன் இல்லை என்றால், சரிதான். மேற்படி நபர்கள் இவ்வழக்கில் பிரதிவாதிகளாக உள்ளனரா என்றால், ஆமாம். மேற்படி நபர்கள் வழக்கறிஞர் வைத்து வழக்கை நடத்திவருகின்றனரா என்றால், ஆமாம்.

5) இவ்வழக்கை வாதிகள் யார் யார் மீது தாக்கல் செய்துள்ளனர் என்றால், பெரியண்ணன், சுப்ரமணி, சேகர் (எ) ஆறுமுகம் (என்மீதும்), சண்முகம், மணிகண்டன் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்துள்ளனர். மேற்படி நபர்களை தவிர வேறு நபர்களை பிரதிவாதிகளாக சேர்த்து வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளனரா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. இவ்வழக்கில் மொத்தம் எத்தனை நபர்கள் பிரதிவாதிகளாக ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்துள்ளனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

6) பெரியண்ணன் இவ்வழக்கு நடைபெற்று வரும் நிலையில் இறந்துவிட்டார் என்றால், சரிதான். என் தாயார் பெயர் பொன்னம்மாள் ஆகும். மேற்படி பெரியண்ணனின் வாரிசுகளை இவ்வழக்கில் வாதிகள் பிரதிவாதிகளாக கட்சி சேர்த்துள்ளனர் என்றால், சரிதான். என் சகோதரர் பெரியண்ணன் இறந்ததற்கு பின்னிட்டுதான் என் தாயார் பொன்னம்மாளை வாரிசு அடிப்படையில் இவ்வழக்கில் வாதிகள் கட்சி சேர்த்துள்ளனர் என்றால், சரிதான்.

7) தனலட்சுமி, ராணி, சுதந்திர வனிதா, சந்திரமேகலா, சண்முக குமார், புனிதவதி, மணிகண்டன் ஆகியோர்கள் மேற்படி பெரியண்ணனின் வாரிசுகள் என்றால், சரிதான். இவ்வழக்கில் ஆரம்பத்தில் பெரியண்ணன், சுப்ரமணி மற்றும் நானும் ஒரே வழக்கறிஞரைதான் நியமித்திருந்தோமா என்றால், ஆமாம். மேற்படி பெரியண்ணன் இறப்பிற்கு பின்னிட்டு அவரின் வாரிசுகள் இவ்வழக்கை வழக்கறிஞர் வைத்து நடத்திவருகின்றனரா என்றால், இல்லை. பெரியண்ணனின் வாரிசுகள் வழக்கை நடத்தவில்லையா என்றால், இல்லை. நாங்கள் நியமித்துள்ள அதே வழக்கறிஞரை

வைத்துத்தான் வழக்கை நடத்திவருகின்றனர்.

8) சின்னத்தாயி, கோவிந்தம்மாள், பாப்பா, ராஜம்மாள், பெரியசாமி, ராஜமாணிக்கம், கந்தசாமி ஆகியோர் யாருடைய வாரிசுகள் என்றால், காவேரியின் வாரிசுகள். இவ்வழக்கில் 19 வது பிரதிவாதியான வேலுமணி யார் என்றால், என் சகோதரி பாலாமணியின் மகன் ஆவார். என் சகோதரி பாலாமணி இறந்துவிட்டார். மேற்படி வேலுமணி மட்டும் தான் பாலாமணியின் வாரிசு ஆவார்.

9) சரசு என்பவர் யார் என்றால், அவரும் என் சகோதரி. தற்போது அவரும் இறந்துவிட்டார். மேற்படி சரசுவின் வாரிசுகள் யார் என்றால், மணிமேகலை, மணிகண்டன், கோவிந்தராஜ், மற்றொரு நபர் பெயர் தற்போது நினைவில்லை. சந்திரா என்பவர் என் சகோதரி அவர் தற்போது உள்ளார். மேற்படி என் சகோதரிகளின் வாரிசுகள் வழக்கறிஞர் வைத்து இவ்வழக்கில் எதிர்வாதம் செய்து வருகின்றனரா என்றால், இல்லை.

10) மேற்படி அனைத்து பிரதிவாதிகளும், வாதிகளும் மந்தி (எ) காவேரியின் வழிமரபினர் என்றால், சரிதான். மேற்படி நபர்களை தவிர மந்தி (எ) காவேரிக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்றால், சரிதான்.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஓம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.